**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 384/2024**

**Prosecution witness : அ.சா.4** **Date : 08.01.2026.**

| | |
|---|---|
| **Name : செல்வி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

1) நான் தற்போது மேச்சேரி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021ம் வருடம் நான் ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக வேலை செய்து வருகிறேன். கடந்த 02.04.2021ம் தேதி நான் காவல் உதவி ஆய்வாளர் உத்தரவின் பேரில் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த பன்னீர் செல்ம், த/பெ வெங்கடாஜலம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து உதவி ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். பிறகு வழக்கு பதிவு செய்ததாக தெரிந்து கொண்டேன். பின்னர் உதவி ஆய்வாளர் ஜலகண்டாபுரம் காவல் நிலைய குற்றஎண்.150/2021 ச/பி 147, 148, 294(பி), 323, 324, 506(2) இதச பிரிவில் வழக்கு பதிவு செய்ததை தெரிந்து கொண்டேன். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் பதிவு செய்ததாக சொல்லப்படும் கடந்த 02.04.2021ம் தேதியன்று வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வாக்குமூலத்திலுள்ள விவரம் எனக்கு தெரியும். கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

2) நான் எங்கிருந்த போது தகவல் கிடைத்தது என்றால் ரோல் காலில் இருந்த போது தகவல் கிடைத்தது. மருத்துவமனைக்கு நான் சென்ற போது புகார்தாரர் சுயநினைவுடன் தான் இருந்தாரா என்றால் ஆமாம். புகார்தாரரிடம் வாக்குமுலம் பெற்று எத்தனை மணிக்கு நிலையத்தில் ஒப்படைத்தேன் என்றால் காலை 10.00

மணிக்கு ஒப்படைத்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் அன்றையதினமே விசாரணை செய்தார்.

**மறுவிசாரணை இல்லை.**

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**